*4*

# பரிசுத்த ஆவியானவரின் ஆறுதல்

## (யோவான் 14)

*"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால்; நீங்கள் அவரை அறிவீர்கள். நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்"*

*(வசனங்கள் 16-18)*

இயேசு தாம் இந்த உலகத்தில் இருந்து புறப்பட்டுச் செல்ல இருந்ததைத் தமது அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்திய பின்பு, உடனடியாக அவர்களுக்குத் தாம் பரிசுத்த ஆவியை அனுப்பப்போவதாக வாக்குத்தத்தம் செய்தார். இந்த வாக்குத்தத்தம், இயேசு அவர்களுக்குக் கூறிய மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்து நின்றது மற்றும் இது மேல்வீட்டில் இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த மாபெரும் செய்திகள் ஒன்றில் உருவாக்கமாயிற்று.

இயேசு தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு [நாற்பதாம் நாளில் பரலோகத்திற்கு] புறப்பட்டுச் சென்றார். அதற்குப் பத்து நாட்களுக்குப் பின்பு, பெந்தெகொஸ்தே நாளில், தேவனுடைய இராஜ்யம் வந்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த நாளில், அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் பெறுமளவுக்குப் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டனர். உடனடியாக அப்போஸ்தலர்கள், உலகம் முழுவதிலும் தேவனுடைய இராஜ்யத்தை விரிவாக்கும் ஊழியத்தைச் செய்யத் தொடங்கினர். அவர்களின் ஊழியம் மகிமையுள்ள, தொலைதூரம் சென்றடையும் சிறப்புமிக்க சொற்றொடர்களால் குறிப்பிடப்படுமளவுக்கு அடிப்படையானதாகவும் நீடித்ததாகவும் இருந்தது. இயேசு முன்னதாகத் தம்முடைய அப்போஸ்தலர்களிடத்தில், ''மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்று கூறியிருந்தார் (மத்தேயு 19:28). தேவனுடைய வீட்டார் "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள்'' என்று பவுல் பிற்பாடு எழுதினார் (எபேசியர் 2:20). அப்போஸ்தலர்கள் செய்ய வேண்டி இருந்த இந்த அஸ்திபார ஊழியம், தனது நிறைவேற்றத்திற்குத் தெய்வீக பலம், ஏவுதலின் வழிகாட்டுதல் மற்றும் பரிசுத்த இணைவு போன்ற வகையிலான

எல்லாவற்றையும் குறைவில்லாது கொண்டிருந்தது என்பது தெளிவு.

குறிப்பாக, அப்போஸ்தலர்களுக்கு இயேசு ஏற்படுத்திய இந்த வாக்குத்தத்தம் என்னவென்று அர்த்தப்பட்டிருந்தது? இது நமக்கு என்னவென்று அர்த்தப்படுகிறது? பரிசுத்த ஆவியானவர் மூலமாக அவர்களுக்குக் கிடைத்த ஆறுதல் என்னவாக இருந்தது?

## தெய்வீக உதவி

*முதலாவது அவர், தெய்வீக உதவி என்ற ஆறுதலை அளிப்பார்.* இயேசு, "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது ... வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" என்று கூறினார் (14:16அ). "தேற்றரவாளன்" என்ற வார்த்தை அவரது வருகையைப் பற்றிய சுருக்கமான இந்த உரையாடலில் பரிசுத்த ஆவியானவருக்கு இருமுறை பயன்படுத்தப்படுகிறது (14:16, 26). *Paraklēton* என்பது "தேற்றரவாளன்" என்பதற்குரிய கிரேக்க வார்த்தையாக உள்ளது, இது 1 யோவான் 2:1ல் இயேசுவைப் பற்றி விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாக உள்ளது [தமிழ் வேதாகமத்தில் இது "பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" என்றுள்ளது].

பரிசுத்த ஆவியானவரை இயேசு, "வேறொரு தேற்றரவாளன்" என்று குறிப்பிட்டார், அவர் இயேசு வெளிக்காண்பித்த அதே பண்புகளைக் கொண்டவராக இருப்பார். இயேசு அளித்திருந்த அதே வகையான வழிகாட்டுதல்களை ஆவியானவர் அளிக்க இருந்தார்.

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவருடைய உதவியின்றி தனிச்சிறப்பான தங்கள் ஊழியத்தைச் செய்ய இயலாதிருந்தனர். இராஜ்யத்தில் அவர்களின் ஊழியம், மனிதபலத்தைக் கொண்டு மாத்திரம் செய்யப்பட்டிருக்க இயலாத அளவிற்கு, மிகவும் குறிப்பிடத்தக்கதாக, மிகவும் தெய்வீகமானதாக மற்றும் மிகவும் நித்தியமானதாக இருந்தது. அப்போஸ்தலர்களுக்குக் கிறிஸ்து கொடுத்திருந்த ஊழியத்தைச் சற்றே பார்த்து, அது அவர்களுக்கு மிகவும் பெரியதாக இருந்தது என்பதை அவர்களால் காணமுடிந்தது. அவர்கள் தங்களுடன் ஊழியம் செய்வதற்குத் தங்களைக் காட்டிலும் பலமான யாரேனும் ஒருவர் தேவைப்பட்டவர்களாக இருந்தனர். பரிசுத்த ஆவியானவரே அவர்களுக்குத் தேவையான தேற்றவாளனாக இருப்பார் என்று அவர்களுக்குக் கிறிஸ்து உறுதிப்படுத்தினார்.

## தங்கியிருக்கும் பிரசன்னம்

*[இரண்டாவது] அத்துடன் கூடுதலாக, பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்கும் பிரசன்னத்தின் ஆறுதலை அப்போஸ்தலர்களுக்குக் கொண்டுவருவார்.* இயேசு "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" என்று வாக்குத்தத்தம் செய்தார் (14:16அ). அவர்களிடத்தில் அவர், "இது முதல் இந்த ஆறுதலைக் கொண்டிருப்பீர்கள்" என்று கூறிக்கொண்டிருந்தார். அவருடைய வார்த்தைகள் உயிர்ப்புள்ளதாய் இருந்தன: "நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்" (14:18).

அவர்களிடத்தில் ஆவியானவர் தங்கியிருப்பார், மற்றும் அவர் ஒரு

அளவில் இயேசுவின் இடத்தை எடுத்துக் கொண்டிருப்பார். கர்த்தர் தம்மைப் பின்பற்றியவர்களிடத்தில், "உங்களிடத்தில் வருவேன்" என்று கூறினார் (14:18), இது அவர் பரிசுத்த ஆவியானவர் என்ற நபர்த்துவத்தில் அவர்களுடன் தங்கியிருப்பார் என்று அர்த்தப்படுகிறது.

அப்போஸ்தலர்கள், கடந்த மூன்று ஆண்டுகளாக இயேசுவின் சொந்தப் பிரசன்னத்தின்மீது சார்ந்திருந்தனர். கர்த்தர் தங்களுடன் இருந்தால், மரணம்கூடத் தங்களைத் துன்புறுத்த முடியாது என்று அவர்கள் நம்பினர். அவர் இலாசருவை மரித்தோரில் இருந்து உயிர்ப்பித்ததை அவர்கள் கண்டிருந்தனர். அவர் கலிலேயாக் கடலில் புயலை அமர்த்தியதை அவர்கள் கவனித்திருந்தனர். அவர் அசுத்த ஆவிகளைத் துரத்தியதையும் திரளான கூட்டத்தினருக்கு உணவளித்ததையும் காண்பதற்கு அவருடன் அவர்கள் இருந்திருந்தனர். இயேசுவுடன் இப்படிப்பட்ட அனுபவங்களைக் கொண்டிருந்தது என்பது, அவரது புறப்படுதலை அவர்களுக்கு இருதயத்தில் பிரிவுத்துயரை ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஆக்கியிருக்கும். அனேகமாக அவரின்றி அவர்கள் உயிர்வாழ்வதை அவர்களால் நினைத்துப் பார்க்கவும் கூடாதிருந்தது.

## ஏவுதல் பெற்ற வழிகாட்டுதல்

மூன்றாவது, ஏவுதல் பெற்ற வழிகாட்டுதலை அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் கொண்டு வருவார். இயேசு, பரிசுத்த ஆவியானவரை "சத்திய ஆவியானவர்" என்று குறிப்பிட்டார் (14:17). மேலும் அவர், "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" என்றும் கூறினார் (14:26). பரிசுத்த ஆவியானவரின் உதவி என்பது இருமடங்காக இருக்கும். அதாவது அவர்கள் கற்றிருந்தது என்ன என்பதை அவர்கள் நினைவுகூரும்படிக்குப் பின்னோக்கிச் செல்வதாகவும், கூடுதல் சத்தியத்தை அளிப்பதற்கு முன்னோக்கிச் சென்று அடைவதாகவும் இருக்கும். ஆவியானவரின் அறிவுறுத்துதலானது அவர்கள் செய்யும்படி அழைக்கப்பட்டிருந்த பிரசங்கித்தல் மற்றும் போதித்தல் ஆகியவற்றை அவர்கள் செய்யக்கூடியவர்களாக்கும்.

தேவனிடத்தில் இருந்தே நாம் சத்தியத்தைப் பெற்றிருக்கிறோம் என்று அறிதலைப் போன்று மறு உறுதிப்படுத்தும் விஷயம் வேறு எதுவும் இருப்பதில்லை. அப்போஸ்தலர்களுக்கு இந்த உறுதிப்படுத்துதல் தேவைப்பட்டது, மற்றும் நமக்கும் இது தேவைப்படுகிறது. ஏவுதலினால் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்குச் சத்தியத்தைக் கொடுத்தார். ஏவுதல் பெற்ற எழுத்துக்களைப் படித்து அவற்றை உண்மைநிறைவுடன் ஏற்றுக்கொள்ளுதல் மூலமாக, சத்தியமானது நமக்கு அறியப்படுத்தப் பட்டுள்ளது. நாம் தேவனுடைய சத்தியத்தில் நிலைநிற்கும்போது, நாம் பரிசுத்த ஆவியானவரின் ஆறுதலில் நிலைநிற்கிறோம்.

## தவறாது தொடர்ந்து நிற்குதல்

நான்காவது, பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு தவறாது தொடர்ந்து நிற்கும் ஆறுதலைக் கொண்டுவந்தார். பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மூலமாக ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருந்தார். இயேசு, "அவர்

உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" என்று கூறினார் (14:17ஆ). அவர்கள் அவரை இயேசுவின் வாழ்வில் கண்டிருந்தனர், மற்றும் அவர் பிரசங்கித்து, போதித்து அவர் மூலமாக அற்புதங்கள் நிகழ்த்தியதைக் கண்டிருந்தனர்; ஆனால் குறுகிய காலத்தில் அவர்கள் மீது அவர் மிகவும் முழுமையாக வந்து, கிறிஸ்தவ யுகம் முழுவதிலும் அவர்களுடன் தங்கியிருப்பார். அப்போஸ்தலர்கள் மீது முழுக்காட்டப்படும் அளவுக்கு ஆவியானவர் இறங்கி வந்தபோது, அவர்கள் ஆவியானவரின் கொடைகளை மற்றவர்களுக்குத் தரக் கூடியவர்களாக இருப்பார்கள். இந்தக் கொடைகளினால் ஆதிசபையானது நிலைநிறுத்தப்படும். மற்றும், பிதாவினிடத்தில் இருந்து மீட்பின் அச்சாரமாகப் பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு கிறிஸ்தவருக்குள்ளும் தங்கி இருப்பார் (நடபடிகள் 2:38; 1 கொரிந்தியர் 6:19, 20). பரிசுத்த ஆவியானவர், அப்போஸ்தலர்களுடனும் எல்லாக் கிறிஸ்தவர்களுடனும் எஞ்சியுள்ள காலம் முழுவதிலும் சொந்தமான வகையில் தங்கியிருக்க வேண்டும். பிதாவின் வலது புறத்தில் இயேசு தமது அமர்விடத்தைப் பெற்றபோது, இயேசுவைப் பின்பற்றுபவர்களின் இருதயங்களில் பரிசுத்த ஆவியானவர் தங்குமிடம் பெற்றுக் கொள்ள வேண்டி இருந்தது.

## முடிவுரை

இயேசு தமது மரணத்திற்காகத் தமது அப்போஸ்தலர்களை ஆயத்தப்படுத்துகையில், அவர் மாபெரும் உறுதிப்பாடுகளை அவர்களுக்குக் கொடுத்தார். அவர் பரிசுத்த ஆவியானவரின் உதவியின் ஆறுதலுடன், சொந்தப் பிரசன்னத்துடன், வெளிப்படுத்துதலுடன் மற்றும் தொடர்ந்து இருத்தலுடன், அவரை அவர்களுக்கு அனுப்புவதாக வாக்குத்தத்தம் கொடுத்தார். இந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமானது மறைமுகமாக நமக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவர் நமக்குள் தமது பரிசுத்த வாசம் பண்ணுதல் மற்றும் அவர் நமக்குக் கொடுத்துள்ள வெளிப்படுத்துதல் மூலமாக, நமக்குத் தேவையான உதவியை அருளுகிறார். ஆவியானவர் பற்றி நமது கர்த்தரின் வாக்குத்தத்தம், கிறிஸ்தவ யுகத்திற்கு இயேசு ஏற்படுத்திய மாபெரும் வாக்குத்தத்தங்களில் ஒன்றாக நிலைநிற்கிறது.

---

*"பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது" (நடபடிகள் 2:1-3).*

*"அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின" (நடபடிகள் 9:31).*